# பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| ௧ | ௩ | ௫ | துய்து | துய்த்து |
| ௧௨ | ௪௭ | ௩ | ெரழுத்தி | தெழுத்தி |
| ௧௫ | ௧ | ௪ | பொருகண் | பொருள்கண் |
| ௧௮ | ௧௯ | ௩ | வீழ்ரித் | வீழ்விரித் |
| ௨௨ | ௫௧ | ௩ | விச்சக | விச்சக |
| ௨௩ | ௯௮ | ௪ | ண்ண ணு | ணண் ணு |
| ௨௮ | ௧௧௩ | ௨ | புந்து | புகுந்து |
| ௩௧ | ௪௨ | ௧ | ணுண்மை | ணுண்மை |
| ௩௫ | ௮ | ௨ | தலைதுதார் | தலைத்தார் |
| ௩௬ | ௧௧ | ௪ | பொறுதி | பொறுத்தி |
| ௪௰ | ௧௯ | ௧ | கடவன் | கடவுள் |
| ௫௰ | ௧௰௬ | ௨ | லதர்வா | லதர்வந் |
| ,, | ,, | ௩ | ஞாணரந் | ஞாணரா |
| ௫௩ | ௧௩௪ | ௪ | தூயனெஞ் | தூயநெஞ் |
| ,, | ௧௩௯ | ௪ | றிருக்குல | திருக்குல |
| ௫௫ | ௧௩௮ | ௩ | கொணட | கொண்ட |
| ,, | ,, | ,, | ருபா | ருப |
| ௬௪ | ௩௪ | ௪ | படிஞ் | படீஇ |
| ௭௨ | ௩ | ௪ | றிவ்விய | திவ்விய |
| ௭௯ | ௪௰ | ௧ | பிங்மர் | பிங்கமர் |
| ,, | ௪௪ | ௨ | தருஞூல் | தருநூல் |
| ௮௰ | ௩௪ | ௨ | வல்லுண | வல்லுந |
| ௮௧ | ௪௪ | ௩ | பொதுத்து | பொருத்து |
| ௮௨ | ௪௯ | ௪ | செயிலி | செயலி |
| ௮௯ | ௩௰ | ௧ | பொறுட் | பொருட் |

☞ இப் புராணத்திற் சில இடங்களில் எதுகைநோக்கி நகரம் னகரமாயிருக்கும் இடம் நோக்கி நகரமாகவேகோள்க.

வச்சிர மணிச்செய் குன்றின் மான்மதி வானிற் செல்கா
லச்சிலை யுற்றென் றுய்மீண் டாங்குற லாணி டத்தி
லிச்சக மொடுங்குங் காலை யெய்திய வயிர்ம லத்தா
லச்சுறீஇ வினையுண் பான்மீண் டவனியுட் சேறல் காட்டும் (ருக)

செம்மணிச் செய்குன் றேகிச் சேணிடைத் திகழ வானோ
ரிம்மலை யருண வெற்பென் றெண்ணிவான் கங்கை யாட்டிக்
கைம்மலர் தூய்ப்பூ சிப்பக் கனம்பெய்யா தருவி பாய்தல்
விம்மித மென்று கண்டோர் விழைவுற விரியு மந்நீர் (ருஉ)

பொருவினீன் மணிச் செய்குன்றின் புடையுயர் பொழிற்பூந் தேன்சார்ந்
தருவியா யொழுகல் கண்டாங் கருந்தின ரென்னே யிந்த
வரையினைப் போர்த்துக் கொண்டல் மதுக்கடல் பருகிப் பெய்த
பரிசுகொல் செந்தே னாகிப் பரவுமிவ் வருவி யென்பார் (ருங)

இந்துகாந் தச்செய் குன்ற மிரவினின் மதிநேர் கண்டாங்
குந்துநீர் நந்தினங்க ளூறீஇமலர் முதலிற் பாய
வந்தில்லை கறைநீர் பாய்ச்ச வடுத்தவா மடுத்திந் நீர்முன்
வந்துபாய்த் தவரா ரென்பார் வாய்மையோ ராத யிர்ப்பார் (ருச)

செய்குன்ற நிரையினின்று தெய்வகற் பகப்பூக் கொய்து
நைகின்ற விடையா ரீண்டை நறுமலர் மணமின் றென்னாப்
பெய்கின்றார் பாங்க ரன்ன பிறங்குபொன் மலரை யாண்டு
*மெய்கின்றா ரீண்டு பொற்பூ வெய்துகா ரணமென் னென்பார் (ருரு)

மாதர்கண் மைந்தர் பற்பன் மணிக்குன்றி னமர்கா லாங்குப்
போதுமோர் கலையைப் பற்றிப் புருவொவ் வாமையிற் கழிப்பார்
பாதியின் பற்றி நெற்றிப் பண்புறு மையின் விடுப்பார்
சீதமாமதிமுகத்தைச் சிவனுறுமையின் வெறுப்பார் (ருசு)

## வேறு.

மகளிர்மலர் வாவிகுடை வான்புகுத வாரிசமாண்
முகைவெள்கி முறுக்குடைவ முலைநோக்கி முகநோக்கி
யகன்மலர்க ளலர்வனவீ தறியாம லாதவனு
னிகழ்மென வெவ்வாறியையு நீலாதிக் கவையின்றால் (ருஎ)

சூழிபடிந் தெழும்பாளோர் துடியிடையை யோர்வீர
னாழியிலாழ்ந் தனையோவா ரணங்கேயென் றுடன்குளித்துப்
பாழியந்தோள் விந்தையெனப் பரித்துவலம் புரியாதி
வாழியரும் பொருளெடுத்து மகிழ்வானிற் கரைவருவான் (ருஅ)

ஓவியபந் திகணீரி லூற்றனகாண் கெனவொருவ
னாவியினல் லாருறுப்பி னணிசுட்டி யாங்கொருவன்
வாவியின்மூ வகைமலரு மலர்ந்தனகோங் கரும்பிதென்றோர்
பூவைபயோ தரம்பிடிப்பப் பூசலவ ளும்விளைப்பாள் (ருகூ)

---

* எய்தல்-அறிதல்.

அனையவர் சைவ வாய்மை யருணெறி நிற்குஞ் சீலந்
தனையுணர்ந் தாங்குச் சூத தபோதனன் சார்ந்தா னன்றன்
வினையறு பூதி கண்டி விளங்குமெய் வேடங் கண்டார்
நினைவினு முந்திச் சென்றார் நிலனுறப் பணிந்தெ ழுந்தார் (சு)

அருந்தவர் புராண மாதி யருங்கலை யமுதே யென்று
மருந்தவன் வதனநோக்கி யடிகளீங் கணுக முன்னோ
ளிருந்தவம் யாது செய்தோ மென்றுரைத் தெய்தி யாங்க
ணிருந்தவண் டவிசி னேற்றி யிறைஞ்சின ரெழுந்து நின்றார் (எ)

நின்றிடு சவுன காதி நிமலமா தவரைச் சூத
னன்றுவந் திறைஞ்சி யோரு நான்குவே தாக மாதி
தொன்றுள நூன்முற் றோர்ந்தீர் சொல்லுமா பதியே வாய்மை
யொன்றுறு பதியென் றோர்ந்தீ ருதுகடைப் பிடியாக் கொண்டீர் (அ)

உம்பெரு மகிமை யிந்த வுலகெலாம் பரந்த வும்மை
யிம்பர்நேர் காணு மார்வ மிப்பகிங் குற்றே மென்று
ணம்புய னனையார் கேட்டாங் கன்புறீஇ முகமன் கூறிக்
கம்பமின் மனத்துத் தூயோர் விறுவொன் றுட டாவ லுற்றார் (கூ)

நான்மறை வகுத்தந் நூலி னவிலுரை தெருள்பு ராணந்
தான்மலி வீரோன் பாலுச் சாற்றிய முனிமா னுக்க
மேன்மைகொள் சூத நாத விளம்புமப் புராணம் பல்பே
ரான்மலீஇச் சிவன்மா லாதி யவர்சிறப் பறையு மென்ப (க0)

வேறு

இவ்வகை புராணம் பதினெட்டுஞ் சிவனுக் கிசைத்தல்போன் மாற்றுமே [மற்
றொவ்வொரு வருக்குந் தலைமைதந் துரைத்தா லுமாபதி யொருவனே பதி
றெவ்வகையோரும்பசுக்களென்றுண்டோரியம்புநூற்பொருட் டுணிபென்னுந்
திவ்விய சுருதி யாகம புராணச் செம்பொரு ளம்புறத் தெளிந்தோய் (கக)

சங்கைமுற் றகல வங்கையா மலகத் தன்மையி னுண்மையோர்ந் துய்வா
னெங்களுக் கருள்கென் றிரந்தனர் சூத னியம்புமப் புராணங்கண் மறைக
டிங்களங் கண்ணி யோன்புகன் றனவத் திருமறைப் பொருள்விளக் குபப்பி
ருங்கண மேயப் புராணமே விரண்டு முரைபொருள் வேற்றுமை யுறுமோ ()

அம்மறை களும்பற் பலர்க்குமத் தலைமை யறையுமாங் காங்குப சாரத் [மில்க
தெம்முறை யெனின்மா லயன்முத லியர்பா லீதலோம் புதன்முதற் றெரு
ளும்மிறை மையுந்தந் தவர்க்குல கடங்கி யுய்வகை யாளுமை தருவே [ன்ம்
யிம்முறை யரச னமச்சனை யானே யிவனெனப் பிறர்க்கிசைத் திடல்போ

மறைகளாங் காங்குத் தியேயவா சகமு மாபதி யொருவற்கே வழங்கு
மிறைமையா ளுரா யணபரோ தியாதா வென்றலா விச்சொலே பிறர்க்கு
மறைதலாற் றியேய சத்தம்வே றெவர்க்கு மாண்பெறு மையினுபக் கிரம
முறையுப சங்கா ரங்களி னனைய முதல்வன்சீ ரேமுழங் குதலால். (கச)

இன்ன காலையோர் நாணிசி நரேந்திர னென்பான்
றன்ன காதலி யொடெட ராசன்பொற் றளியின்
முன்னி யன்புமீக் கூர்தர முன்றொழு தமையான்
பன்னி நின்றனன் சென்றதந் நிசியொரு பாதி. (௫௯)

அசனி கான்றுவா னதிமழை பொழிந்ததங் குழையர்
நசைகொள் யானமுன் னுய்த்திதி லிவர்ந்துநீ நனுகென்
றசைவில் வேந்தனை வேண்டவு மாலயத் தினுகா
மிசைவின் யானமூர்ந் திற்செலே மென்றுமே லியம்பும். (௬௰)

அல்ல தூஉஞ்சத்தி ராதிகொண் டுஞ்செலே மருளாற்
செல்லொ ழிந்தபின் வருதுநீர் சென்மினென் றிசைத்தா
னல்லன் மிக்கா ரிருட்பெரு மழையினு மாசுஞ்
செல்லல் பாதகங் குடையினு மிற்கெனச் செப்பில். (௬௧)

என்ன பாவஞ்சிற் சிலர்தமைப் பெரியரென் றிறுமாந்
தன்ன வூர்திமான் முனையருஞ் சேய்மையே யடிதாழ்ந்
தின்னி லத்தினி னடந்துசெல் லிறைதிருக் கோயிற்
குன்னி யேகுகா லையுஞ்சிவி காதியி லுறுவார். (௬௨)

இறைவ னேயிதி லிவர்ந்துசெல் லெங்கணு மென்று
நிறையு மாரரு ளாற்றரு நித்தில யானத்
துறைத ராதநி தூரத்தே யிழிந்துசென் றுறுமாற்
கறைமி டற்றிறை ேறற் குரியசேய் காழிவாழ் பிள்ளை. (௬௩)

உரிய பிள்ளையில் வுலகுய விங்ஙன மொழுகித்
தெரியக் காட்டவுந் தெளிந்திடா தழிபொருட் செருக்காற்
பெரியர் நாமென வாய்மதம் பேசிக்கண் மறைந்து
திரியு மேலையோர்க் கிறைசெய்தண் டனையெவர் தெரிப்பார். (௬௪)

அன்று சேக்கிழார்க் குலகெலா முலகுய வருளு
மன்ற வாணன்முன் னின்றிடு மாசைகூான் மொழியா
லொன்று வேந்தநின் றுனைகா வலன்மனை யொடுமிற்
கொன்று தானர சினைக்கொளக் குறித்திவண் குறுகும். (௬௫)

ஆத லானம தாணையாற் சிலையுரு வாகிக்
காத லாளொடு நமதணி மையிற்கலந் திருந்தே
யோத லாவெழின் மனேறுகாற் கிரொட்டாண் டுறுகாற்
றீதி லாநம துருக்கொண்மி னென்றருள் செய்தான். (௬௬)

அருளிச் செய்தவா நரேந்திரன் மனையொடு மாங்கே
தெருளிற் கூர்சிலை யுருவமுற் றிருந்தனன் சிவர்க்
கிருளிற் றீர்தர வருள்பத நான்கினு ளிஃதெப்
பொருளிற் சார்வதோ சிவன்செயல் யாவரே புகல்வார். (௬௭)

சங்கர கங்கா தரபர மகேச சதாசிவ வுமாபதே தாணோ
செயகர வேணிக் கங்கைதன் மதியோஞ் சேர்த்தவர் தெழுத்துணவிழி
நகர் வபய வரதமான் மழுமுற் சார்ந்துயிர்க் கருண்முறை விளக்கு
மங்கர வடியேற் கருள்பெருந் தோட்டத் தமலனே யமரர்கா யகனே. (கங)

வேறு

என்று துதித்தா னுளங்களித்தா னெழுந்தஞ் சலித்தான் பன்முறையு
நன்று பணிந்தான் றனைடைந்த நலங்கூ ரின்ப மாசாற்குஞ்
சென்று மொழிந்தாங் குவப்பிப்பான் சிந்தை புரிந்தான பிரிவாற்று
னென்று முளமச் சிவபதத்தி லுறுத்திச் சென்றான் முனியுடசம். (கச)

போதா யனமா முனிவரன்றாட் புண்ட ரீகம் பணிந்தடிகே
ளீதோ வணித்தோ ருய்யானத் தெழின்மா மலர்கொய் திடப்போந்தேன்
மாதோர் பாக னருட்குறியென் மலஞ்சாய் குறிபாக் கண்டுவந்தேன்
யாதோ துவலவ விலிங்கேச னிணைத் தருளாகூ ரெழின் மாண்பு. (கடு)

என்றா னிதுகேட் டவு மாரி ய னெழுந்தான் விரைந்தா னவனுடனுப்
சென்றா னனைய வருட்குறியைத் திப்புழ லக்கிற் கொடுவன் போய்
நின்ற மாதே வர்வனுஞ்சொன னிகழ்த்து சுகத்தோட லைசத்துமுடி
நன்ற வருகென் றழைத்தலினே நலங்கூர் *பிணைத்தான றுறக்கண்டான்.

தலைவான் கடப்ப வடியுரக தலத்தைக் கடப்பத் தரிப்போர்த்து
மலாசெய வொளியெப கணும் பரப்பி லயங்கவ வாச மகிருந்தமை
வலதே வாசா மானருண மலேபா வென்பா னனமெனமென்
கலைபாகருறமண் கிளந்தடியற †களிறென் றுறக்கண டுளங்களித்தான்.

களித்து விரையச் சென்றணுகிக் கருணை யொழுகுஞ் சிவலிங்கத்
தெளித்த வுருக்கண் டவசமாயத் திருமுன் வீழ்ந்தா னடுத்வெள்ளங்
குளித்தப கொருவா றெழுந்திருகை கூம்பச் சிரமே லருமறைக்கு
மொளித்த முதலை யயணமவெளியங் தொளிதற் கெளியேர் தவமென்றே

வேதந் தொடர மால்பிரமன் மிக்கோர் தொடர வெட்டருநீ
யேதந் தொடரும் பலகாடன்மேழ் கெளியே முய்ய வெளிவந்தா
யாதுந் தொடாதற் கரியமெனில் யாருஞ் செபலொன றிலராய்நம்
பாதந் தொடரா தொழிவரெனும் பற்றா லலது பகர்வதெவன். (கஎ)

அடியு முடியு மிருவர்முன மறியா தெழுந்த நிலைநின்றும்
முடியொன் றறிய வடியதல முழுதுங் கடக்க நின்றனைநின்
வடிவம் போல முக்கூற்று வடிவ மன்றோ விவ்வரசு
நெடிய முடியும் விழிக்கெட்டா நிலைய தாய்நின் றிடலென்னே. (கஅ)

பவஞ்ச மெவையும் பகாகார லிங்கா காரப் பான்மையவப்
பவஞ்ச ரூபீ நீயேயென் பதுகே ரோர்ந்திவ வுலகுய்வா
னிவந்த பீட லிங்கவுரு நீகொண் டுறைவோ னின்புடையே
நிவந்த வரசுந் தன்னிலையி னிறைய விளக்கு மவ்வுருவம். (கக)

*பிணை-அரசமரம். †களிறு-பன்றி.

சுந்தரன் வலியும் வீரமும் வனப்புந் தூயமான் குணமுநன் குணர்ந்து
சுந்தரி யவனை யேமணம் புணர்வான் றுணிந்தன ளனையவ ளனைய
சுந்தர னீசொல் குணமெலா நிறைந்த தூயனே யாயினுங் குலமே
சுந்தர மணத்துக் குரியதாச் சிறந்த தொன்மைய தாதலிற் றேர்காய். (கஙஅ)

குலமிது வெனவோர்ந் திடப்பெரு வியற்குக் கொடுப்பதிக் கடுப்பதோ வின்ன [விரித்துப்
புலனெடுத் துரைத்தெம் மகளுநாங் கிருந்திப் பொருந்துமென் றுரைத்தனன்
கலனுரைத் தனனோங் குலமின்றே னன்றுப் காடுமோ வென்னுளந் தெய்வ
பலமுமே யவனே பதியெனக் கினிநீ பகர்வொழி கென்றுசுந் தரிபின் (கஙகூ)

என்னுறு கற்பு கன்னிலந் தெனில்யா னெண்ணியாங் கியனெனை மணக்கும்
மின்னுணர் கென்று முன்னர்வா கீசப் பெருந்தகை வடதளி நோர்நின்
றின்னுறு பெம்மான் சந்நிதி யன்றே னென்னாப் புவிபுமோ வென்ற
நன்னிலை யீண்டு ஞாபக மாக நவிலக்கேட் டாசற்கு நவின்றாள். (கசo)

இரதிசுந் தரியீ திசைத்தலுஞ் சுயம்பு நேசனத் தன்மதிக் கிசைப்பான்
மருவுமென் றனையை சுந்தரன் றனைமே மகிழ்நனு வரித்தனள் மனத்தா
னுரைசெயுங் கருத்து முற்றுறு தென்று னுதுவி றுப்பத் தன்மதி சென்று
புரைகொள்வஞ் சனையாற் றன்பெயர்க் கேற்றபுன்மையா லோசனை புரிவான்

தன்செயற் கியைதுச் சீலனு மமைச்சன் றனைவிளீ இச் சுந்தரற் கோறற்
கென்செய லதுசெய் கெனவவன் புகார்சென் றிறையனை கட்டமைச் சாகிப்
புன்செயற் காசா யமைச்சனும் பதகன் புரவலன் மகன்விடங் கனைப்பல்
வன்செயலினர்கொண் டேகுறப் பணிந்தான் மற்றவர் செய்மையின் மறைந்தார்

விடங்கனை யன்னை தந்தைகா ளுது வெந்துயர்க் கடலின்மூழ் குறுங்காற்
கொடுந்தொழிற் சீலன் சிலரையவ் வாறு கூறுவி னெனத்திரித் தியக்க
மிடைந்தவ ராசே விடங்கசும் தரர்க்குள் விரோதமேற் றுணர்ந்தன மவருள்
மடங்கலன் னான்சுந்தரன் விடங்கனைப்பின் மாய்த்தனன் கொல்லெனவடித்தார்

அனையதுச் சீலன் துக்கமேற் கொண்டாங் கழுதகண் ணீருட னடைந்தா
னினையும்வேந் தவனை நோக்கிநல் லமைச்சவென் சொல்கே முயிரினுஞ் சிறந்த
தனையனில் வளர்த்த சுந்தரன் விடங்கன் றனைக்கொன்று தீட்டிய மரத்தின்
முனையறிந் தானல் லுரித்தெனவுடனுப் முடித்தன னாவினுங் கொடியோன்

இவனைமேற் செய்வதென் னெனப்பதகனி றுத்தலேமுறை யெனவிறுந்தா
னவனிகாவலனே மாங்கமா முடிவேந் தானையோர்ந் தவ்வழி செயவப்
புவனி காவலற்கீ துணர்த்திய விறைபின் போந்திடு மளவுஞ்சுந் தரனை
யுவனைமைந் தனைச்சூ ருப்பத்தெனச் சிறையி லுய்த்தன னுணர்விலா வேந்தன்

வேறு.

அவ்வழிசுந் தரன்சிறையி னமர்ந்தயிரா வதநாத னடியே பற்றி
யெவ்விடரு மீசனரு ளிலேசத்திற் கெதிரலவென் றெண்ணித் தேர்ந்த
செவ்வியனு தலின்வருந்தான் சிவனடியே சிந்தித்துத் தீமை தீர்ந்தான்
வவ்வழனீற் றறையமர்ந்த வாகீசத் திருவடிகண் மகிமை போற்றி. (கசசு)

